
தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253
நமது தினகனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்

KANI GYM
CALL:9894808044

| Vol: 02 | Issue: 233 | 4 Pages | 21.3.2025 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 233 | 4 பக்கங்கள் | 21.3.2025 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**வேண்டினுண் டாகத் துறக்க துறந்தபின்**
**ஈண்டியற் பால பல**

**விளக்கம்:**
**துன்பமில்லாதநிலைமைவேண்டுமானால் எல்லாப் பொருள்களும் உள்ள காலத்திலேயெ துறக்க வேண்டும்,துறந்த பின் இங்குப் பெறக்கூடும் இன்பங்கள் பல.**

## சுனிதா வில்லியம்சுக்கு ஜனாதிபதி முர்மு, பிரதமர் மோடி வாழ்த்து

புதுடெல்லி, மார்ச்.21

சர்வதேச விண்வெளி மையத்தில் 9 மாதங்களாக இருந்த சுனிதா வில்லியம்ஸ்(59), மற்றும் புட்ச் வில்மோர்(62), இன்று அதிகாலை பூமிக்கு திரும்பினர். அவர்களை சுமந்து வந்த 'ஸ்பேஸ் எக்ஸ்' நிறுவனத்தின் 'டிராகன்' விண்கலம் இந்திய நேரப்படி அதிகாலை 3.27 மணிக்கு புளோரிடா அருகே பத்திரமாக கடலில் தரை இறங்கியது. மீட்புப்படையினர் அவர்களை பத்திரமாக மீட்டனர்.

இந்நிலையில், பூமிக்கு திரும்பிய சுனிதா வில்லியம்சுக்கு இந்திய ஜனாதிபதி திரவுபதி முர்மு வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக 'எக்ஸ்' தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் கூறப்பட்டுள்ளதாவது;

"நாசா விண்வெளி வீரர்களை பூமிக்கு பாதுகாப்பாக அழைத்து வந்த குழுவினருக்கு வாழ்த்துகள். இந்தியாவின் மகள் சுனிதா வில்லியம்ஸ் மற்றும் அவரது சக விண்வெளி வீரர்கள் தங்கள் விடாமுயற்சி, அர்ப்பணிப்பு மற்றும் மனஉறுதியால் அனைவரையும் ஊக்கப்படுத்தி யுள்ளனர்.

அவர்களின் வரலாற்றுப் பயணம் உறுதிப்பாடு, குழுப்பணி மற்றும் அசாதாரண தைரியத்தின் உதாரணமாகும். அவர்களின் அசைக்க முடியாத உறுதியை வணங்குகிறேன். அவர்களுக்கு சிறந்த ஆரோக்கியம் பெற வாழ்த்துகிறேன்." இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

இதே போல் பிரதமர் நரேந்திர மோடி 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "சுனிதா வில்லியம்ஸ் மற்றும் விண்வெளி வீரர் குழுவினர் மீண்டும் ஒருமுறை விடாமுயற்சி என்றால் என்ன என்பதைக் காட்டியுள்ளனர்.

விண்வெளி ஆய்வு என்பது மனித ஆற்றலின் வரம்புகளை தாண்டிச் செல்வது, கனவு காணத் துணிவது மற்றும் அந்த கனவுகளை நிஜமாக மாற்றும் தைரியத்தைக் கொண்டிருப்பதாகும். இந்த உணர்வை சுனிதா வில்லியம்ஸ் தனது வாழ்க்கை முழுவதும் வெளிப்படுத்தியுள்ளார்.

அவர்களின் பாதுகாப்பான வருகையை உறுதிசெய்ய அயராது உழைத்த அனைவரையும் நினைத்து பெருமைப்படுகிறோம். துல்லியத்துடன் ஆர்வமும், தொழில்நுட்பத்துடன் விடாமுயற்சியும் இணையும்போது என்ன நடக்கும் என்பதை அவர்கள் நிரூபித்துள்ளனர்."

இவ்வாறு பிரதமர் மோடி பதிவிட்டுள்ளார்.

## குஜராத்தில் பயங்கரவாத தடுப்பு பிரிவு ரெய்டு.. குவியல் குவியலாக சிக்கிய தங்க கட்டிகள்



அகமதாபாத், மார்ச்.21

குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் உள்ள ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் சந்தேகத்திற்கிடமான நடவடிக்கைகள் இருப்பதாக உளவுத்துறை போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதைத்தொடர்ந்து அந்த குடியிருப்பில் பயங்கரவாத தடுப்பு படையினர் (ஏ.டி.எஸ்.) மற்றும் வருவாய் புலனாய்வு பிரிவினர் இணைந்து அதிரடி சோதனை நடத்த சென்றனர்.

அங்கு வீடு பூட்டப்பட்டு இருந்தது. விசாரணையில் அந்த வீட்டில் மேக் ஷா என்பவர் வசித்து வருவதும், அவரது தந்தை மகேந்திர ஷா, துபாயில் பங்குச்சந்தை முதலீட்டாளராக இருப்பதும் தெரியவந்தது. மேலும் அவரின் உறவினர்ஒருவர்அதேகுடியிருப்பில்4வதுமாடியில்வசிப்பதும்தெரியவந்தது. அவரிடம் இருந்து வீட்டின் சாவியை பெற்று பயங்கரவாத தடுப்பு படையினர் அதிரடி சோதனை நடத்தினர்.

அப்போது வீட்டின் உள்ளே 87.9 கிலோ தங்க கட்டிகள், 19.6. கிலோ தங்க நகைகள்மற்றும்கோடிக்கணக்கானரூபாய்மதிப்புள்ள11உயர்ரகவெளிநாட்டு கடிகாரங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. மேலும் அங்கு கட்டுக்கட்டாக பணம் இருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது. அங்கு சிக்கிய பணத்தின் அளவு அதிகமாக இருந்ததால் அதை எண்ணுவதற்காக எந்திரங்கள் கொண்டு வரப்பட்டு பணம் எண்ணப்பட்டது. அதன் மூலம் வீட்டில் இருந்த ரொக்கப் பணம்ரூ.1.37கோடிபறிமுதல்செய்யப்பட்டது.இதைத்தொடர்ந்துபறிமுதல் செய்யப்பட்ட தங்க கட்டிகள், தங்க நகைகள், ரொக்கப்பணம் ஆகியவற்றின் மொத்த மதிப்பு ரூ.100 கோடி இருக்கும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதையடுத்து பறிமுதல் செய்யப்பட்ட நகைகள் மற்றும் பணத்தை பயங்கரவாத தடுப்பு படையினர் வருவாய் புலனாய்வு அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். அவர்கள் இது தொடர்பாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

பறிமுதல் செய்யப்பட்ட தங்கம் அனைத்தும் வெளிநாடுகளில் இருந்து கடத்தி வரப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. அந்த வீட்டில் வசிக்கும் மேக் ஷா, அவரது தந்தை மகேந்திர ஷா ஆகிய இருவருக்குமான நிதி பரிவர்த்தனைகள் போலி நிறுவனங்கள் மூலம் நடத்தப்பட்டு இருக்கலாம் எனவும் போலீசார் கருதுகின்றனர். இந்த சம்பவத்தின் பின்னணியில் சர்வதேச கடத்தல் கும்பலுக்கு தொடர்பு உள்ளதா? என்ற கோணத்திலும் விசாரணை நடத்தப்படுகிறது.





இவரது விவசாய நிலத்திற்கு செல்லும் மின் இணைப்பு கம்பிகள் அனைத்தும் மிகவும் தாழ்வாக இறங்கிவிட்டதால் மின் மோட்டாரை இயக்க பயந்து அச்சத்துடன் உள்ளார் மேற்படி நிலத்தில் கரும்பு, வாழை பயிரிட முடியாமல் தவிக்கிறார். இது குறித்து கடந்த 2 வருடமாக லைன் மேன், போர் மேன்,JE, AE என மின்வாரிய அதிகாரிகளிடம் புகார் செய்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எந்த நேரத்திலும் இங்கு(செட்டியூர்.. சர்வீஸ் எண் 1) மின் விபத்து ஏற்படும் அபாயத்தில் விவசாயி பரமசிவம் பயத்துடன் விவசாயம் செய்து வருகிறார் மின்வாரிய அதிகாரிகள் உடனே நடவடிக்கை எடுத்து மின்சார விபத்து ஏற்படாமல் தடுப்பார்களா?

### 'நான் பேசுவதை கேட்டுவிட்டு வெளிநடப்பு செய்யுங்கள்':

# எடப்பாடி பழனிசாமி வெளியேறும்போது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆவேசம்

சென்னை மார்ச் 21

தமிழ்நாடு சட்டசபையில் பட்ஜெட் மீதான 4வது நாள் விவாதம் இன்று நடைபெற்றது. அப்போது தமிழ்நாட்டில் நேற்று ஒரே நாளில் 4 கொலைகள் நடைபெற்று இருப்பதாகவும், தமிழ்நாட்டின் அன்றாட நிகழ்வாக கொலை சம்பவங்கள் நடந்து வருவதாகவும் எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி குற்றம்சாட்டினார்.

இதற்கு பதிலளித்து பேசிய முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின், "தமிழகத்தில் காவல்துறை சுதந்திரமாக செயல்பட்டு வருகிறது. குற்றவாளி யாராக இருந்தாலும், எந்த கட்சியாக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதில் எந்த பாரபட்சமும் காட்டப்படுவதில்லை.

2023ம் ஆண்டு 49,280 கொலை, கொள்ளை சம்பவங்கள் நடந்த நிலையில், 2024ல் 31,498 குற்ற சம்பவங்கள் நடந்துள்ளன. தமிழ்நாடு காவல்துறையின் நடவடிக்கை காரணமாக ஒரே ஆண்டில் 17,782 குற்றங்கள் குறைக்கப்பட்டுள்ளன. எண்ணிக்கை அடிப்படையில் 6 சதவிகிதம் கொலைகள் குறைந்துள்ளன. பழிக்குப் பழி வாங்கப்படும் கொலைகளும் குறைந்துள்ளன.



2023ம் ஆண்டு 181 மற்றும் 2024ல் 242 சரித்திர பதிவேடு குற்றவாளிகளுக்கு தண்டனை வாங்கி கொடுக்கப்பட்டுள்ளது. அ.தி.மு.க. ஆட்சியில் 2012ம் ஆண்டு 1,943 கொலைகள், 2013ல் 1,927 கொலைகள் நடந்துள்ளன. கடந்த 12 ஆண்டுகளில் 2024ம் ஆண்டில்தான் மிகக் குறைவாக 1,540 கொலைகள் நடந்துள்ளன" என்று தெரிவித்தார்.

இதற்கிடையே எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி மற்றும் அ.தி.மு.க. உறுப்பினர்கள் சட்டப் பேரவையில் இருந்து வெளிநடப்பு செய்தனர். அப்போது முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின், "தூத்துக்குடி சம்பவம், சாத்தான்குளம் சம்பவத்தை எல்லாம் மறந்துவிடக் கூடாது. தொலைக்காட்சியை பார்த்துதான் தெரிந்து கொண்டேன் என்று சொல்வதற்கு நாங்கள் தயாராக இல்லை. தைரியம் இருந்தால் நான்பேசுவதைகேட்டுவிட்டுஅ.தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்யுங்கள்" என்று தெரிவித்தார். இருப்பினும் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின்பேசிக்கொண்டிருக்கும் போதே அ.தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

## ஸ்டார்ட்அப் நிறுவனங்களுக்கு வாய்ப்பு வழங்கும் எலிசியம் குழுமம் தென்னிந்தியாவில் முதன் முறையாக மதுரையில் செயற்கை நுண்ணறிவு இன்குபேஷன் மையம் திறப்பு

மதுரையை மையமாகக் கொண்டு 1999ம் ஆண்டு முதல் தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகளில் முன்னோடி சக்தியாக செயல்பட்டு வரும் எலிசியம் குழுமநிறுவனங்களின் கார்ப்பரேட் அலுவலக திறப்பு விழா மதுரை அண்ணாநகரில் 19032025 அன்று நடந்தது. சுமார் 40,000 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ள புதிய அலுவலகத்தை எலிசியம் குழும தலைவர்திரு. சுந்தரேஷ் காமராஜ் அவர்கள், திருமதி. தனலட்சுமி சுந்தரேஷ் மற்றும் புதல்வர்கள் சிவேஷ் சுந்தரேஷ், மிதுனா சுந்தரேஷ் ஆகியோர் திறந்து வைத்தனர். நிகழ்ச்சியின்போது நிறுவனத்தின் டைரக்டர் டாக்டர் முத்துமாரி அய்யாக்கண்ணு, நிர்வாக உறுப்பினர்கள் உடனிருந்தனர். அதனைத் தொடர்ந்து எலிசியம் குழுமத்தின் 25வது ஆண்டு விழா மற்றும் பணியாளர் விருது வழங்கும் விழா நடைபெற்றது. இதில் டிஜிட்ஆல் அமைப்பின் தலைவர் திரு.ஜே.கே.முத்து, யு எக்ஸ்போர்ட் தலைவர் திரு.திருப்பதிராஜன் மற்றும் தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கம், ஜேசிஐ, சிஐஐ, சிடா உள்ளிட்ட அமைப்புகளைச் சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டு வாழ்த்திப் பேசினர். விழாவின்போது சிறப்பாக பணியாற்றிய பணியாளர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பரிசு, கேடயங்கள் வழங்கப்பட்டன.

புதிய அலுவலகம் திறப்பு குறித்து எலிசியம் குழும நிறுவனங்களின் நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரிதிரு.சுந்தரேசன்காமராஜ் நிருபர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:

1999ம் ஆண்டு முதல் மதுரையை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் எலிசியம் நிறுவனம் தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகளில் பல்வேறு சாதனைகளைப் புரிந்துள்ளது. தற்போது புதிய அலுவலகம் திறப்புடன், மைல்கல் சாதனையாக எலிசியம் குரூப்ஸ் ஆஃப் கம்பெனிகள் (இஜிசி) மற்றும் எலிசியம் இன்டலிஜென்ஸ் பிசினஸ் சொல்யூஷன்ஸ் (இஐபிஎஸ்) ஆகியவற்றின் அதிகாரப்பூர்வ அறிமுகத்தை செய்துள்ளோம். நாங்கள் 6 பிரைவேட் லிமிடெட் நிறுவனங்கள் மூலம், ஏறக்குறைய 100 நாடுகளுக்கு மேல் சாப்ட்வேர் மற்றும் தொழில்நுட்பத் தீர்வுகளை வழங்கி வருகிறோம்.

பணியாளர்கள் எண்ணிக்கையை அதிகப்படுத்தவும், வாய்ப்புகளை விரிவாக்கம் செய்யவும் தற்போது டேடலஸ் ஹப் (Daedalus Hub) என்ற பெயரில் இன்குபேஷன் சென்டர் ஒன்றையும் நிறுவியுள்ளோம். மதுரையில் ஸ்டார்ட் அப் நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையிலும், புதிதாக தொழில் தொடங்க முன்வருபவர்களுக்கு வழிகாட்டும் விதமாகவும் இந்த இன்குபேஷன் மையம் செயல்படவுள்ளது. நல்ல புத்தாக்க படைப்புகளுக்கு நிதி உதவியும் செய்ய முடிவு செய்துள்ளோம். நாங்கள் ஏற்கனவே ஏஐ எனப்படும் செயற்கை நுண்ணறிவு சார்ந்த துறையில் இருப்பதால், இந்த மையமும் ஏஐ மற்றும் ஐஓடி ஆகியவற்றை மையப்படுத்தி செயல்படும். தென்னிந்தியாவின் முதல் ஏஐ இன்குபேஷன் சென்டர் இதுவாகும்.



தற்போது எலுசியம் குழும நிறுவனங்களில் 250 பேர் பணியாற்றி வருகிறார்கள். 2026ம் ஆண்டுக்குள் இந்த எண்ணிக்கையை 700 ஆக உயர்த்த திட்டமிட்டுள்ளோம். புதிதாக திறக்கப்பட்டுள்ள கார்ப்பரேட் அலுவகத்தில் 450 பேர் வரை அமர்ந்து பணியாற்றலாம். இந்த அலுவலகத்தில் பணியாளர்களுக்கு தேவையான தேநீர், உணவு, உடற்பயிற்சி, காட்சிக் கூடம் என அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம். எங்களது பணியாளர்கள்தான் எங்களது சொத்து என்கிற தாரக மந்திரத்தோடு செயல்படுவதால் பணியாளர்கள் ஏராளமான புதிய நிறுவனங்களை உருவாக்க வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்து வருகிறோம். டாடா போன்ற பெருநிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு இணையாக எங்கள்து பணியாளர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்துக் கொடுத்து, நல்ல பணிச்சூழலை உருவாக்கியுள்ளோம்.

இவ்வாறு திரு,சுந்தரேஷ் காமராஜ் கூறினார்,

பேட்டியின்போது நிறுவனத்தின் துணைத் தலைவர்கள் யு.சங்கர் கணேஷ், கே.அருண்குமார் மற்றும் டாக்டர் ஆர்.ஏ.நாகராஜன் ஆகியோர் உடனிருந்தனர்.

## வாகன ஓட்டிகள் சிரமபடுவதை கருத்தில் கொண்டு சாலையை செப்பனிடும் பொருட்டு தார் சாலை புதிதாக அமைக்கும் பணி

மதுரை மாநகர் சொக்கி குளம் பகுதியில் உள்ள கமலா இரண்டாவது தெரு மற்றும் 32வது வார்டுகளுக்கு உட்பட்ட அனைத்து சாலைகளும் சீர் செய்யும் பொருட்டு தமிழக அரசு உத்தரவின்பேரில் சேதமடைந்த சாலைகளை சரி செய்து வருகிறார்கள் பல நாட்கள் ஆக சாலைகளில் வாகன ஓட்டிகள் சிரம படுவதை கருத்தில் கொண்டு சாலையை செப்பனிடும் பொருட்டு தார் சாலை புதிதாக அமைக்கும் பணி தொடங்கியது இதில் மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் பொன் சேது விஜய மௌசுமி அவர்கள் மாநகராட்சி அதிகாரிகள் தார்சாலை அமைக்கும் பணியாளர்கள் அனைவரும் ஒன்றுகூடி இறைவனை வேண்டி கொண்டு பூஜைகள் செய்து அந்ததெருவில்தார்சாலைஅமைக்கும் பணியினை மிக சிறப்பாக நடைபெற எல்லா வல்ல இறைவனை வேண்டி கொண்டு மதுரை மாநகராட்சி அலுவலர்கள் உதவி பொறியாளர் கருப்பையா அவர்கள் பணி சிறக்க வேண்டி கொண்டு பணியினை கண்காணித்து வருகிறார்கள்



## சேது பாஸ்கரா வேளாண்மை கல்லூரியில் மாபெரும் வேலை வாய்ப்பு முகாம்



விசாலையன்கோட்டையில் அமைந்துள்ள சேது பாஸ்கரா வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் வேளாண் பட்டதாரிகளுக்கான மாபெரும் வேலைவாய்ப்பு முகாம் கல்லூரியின் தாளாளர் முனைவர் சேது குமணன் அவர்களின் வழிகாட்டுதலின்படி நடைபெற்றது. இம்முகாமில் 10 க்கும் மேற்பட்ட வேளாண் இடுபொருள் தொழில் நிறுவனங்கள்பங்கேற்றுமாணவர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கினார்.

இவ் வேலைவாய்ப்பு முகாமில் பல்வேறு வேளாண் கல்லூரிகளில் இருந்து சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். இம் முகாமின் துவக்க விழாவில் கல்லூரியின் முதல்வர் பொறுப்பு முனைவர் மா. விஷ்ணுப்பிரியா அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். இதனைத் தொடர்ந்து சேது வள்ளியம்மாள் அறக்கட்டளையின் அறங்காவலர் திரு. விவேகானந்தன், பாஸ்கரா பில்டர்ஸ், சென்னை சோகா இகெதா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் துணை முதல்வர் முனைவர் கண்மணி சுப்பிரமணியன் மற்றும் கல்லூரியின் செயலர் திரு. கந்தப்பழம் அவர்கள் வாழ்த்துரைவழங்கினர். இவ் வேலை வாய்ப்பு முகாம் நேர்காணலில் தேர்வு செய்யப்பட்ட மாணவர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டது. இறுதியாக முனைவர் கவியரசு அவர்கள் நன்றியுரை நல்கினார். இதற்கான ஏற்பாடுகளை பேராசிரியர்களும் மாணவர்களும் சிறப்பாக செய்தனர்.

# ஜே.எம்.ஜே மீடியாவினால் நடாத்தப்பட்ட "பூமியில் சுனிதா ரிட்டர்ன்ஸ் ஆப் த டே" நிகழ்வு




கடந்த 9 மாதங்கள் விண்வெளியில் தங்கியிருந்து ஆராய்ச்சியினை மேற்கொண்டு விட்டு இன்று அதிகாலை 3.45 மணியளவில் மீண்டும் பூமிக்குத் திரும்பிய சிங்கப் பெண் சுனிதா வில்லியம்ஸை கோலாகலமாக வரவேற்கும் முகமாக சிறப்பு நிகழ்வினை ஜே.எம். ஜே மீடியா நிறுவனம் நடாத்தியிருந்தது.

உலகின் பல்வேறு சிறப்பு தினங்களை உலகின் பல்வேறு நாடுகளிலுள்ள தமது நிறுவாக உறுப்பினர்களின் உதவியுடன் நடாத்திவரும் ஜே.எம்.ஜே மீடியா நிறுவனமானது இன்றைய தினம் உலகமே எதிர்பாத்துக் காத்திருந்த சிங்கப் பெண் சுனிதா வில்லியம்ஸின் பூமிக்கான வருகையை நிறுவனத்தின் பணிப்பாளர் ஜஸூரா ஜலீலின் தலைமையில் மிகச்சிறப்பாக நடாத்தி முடித்திருந்தது. இந்நிகழ்வு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி வள்ளிப்பட்டு ஆலங்காயம் ஒன்றியம் வாணியம்பாடிதிருப்பத்தூர் மாவட்டம் தமிழ்நாடு இந்தியாட்டு பாடசாலையில் ஜே.எம்.ஜே மீடியாவின்பிரதான அணுசரனையில் நடந்தேறியிருந்தது. இதன் போது விண்வெளிக்குச் சென்று திரும்பிய சிங்கப் பெண் சுனிதா வில்லியம்ஸ் உள்ளிட்ட குழுவினருக்கு இந்நிறுவனத்தின் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தியும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இச் சிறப்பு நிகழ்வில் ஜே.எம்.ஜே மீடியாவின் இந்திய நிர்வாகக் குழு உறுப்பினரும் தலைமை ஆசிரியருமான திரு.சீ.சிவஞானம் நாசா விஞ்ஞானிகளுக்கு பாராட்டுகளை தெரிவித்தார். அத்துடன் இப்பள்ளியின் மூத்த உதவி ஆசிரியைகள் கு.கோமகள், .மு.சரஸ்வதி மற்றும் ஆசிரியர்கள் வெ.ரமேஷ் , ரா.அண்ணாமலை மற்றும் மா.அருள்மொழி ஆகியோர் விண்வெளியில் பயணம் செய்த வீராங்கனை பற்றிய அறிவியல் செய்திகளை மாணவர்களுக்கு விளக்கி கருத்தரங்கும் நடத்தப்பட்டது. இந்த நிகழ்வின் மூலம் மாணவர்களுக்கு அறிவியல் தொடர்பான சந்தேகங்கள் தீர்க்கப்பட்டதுடன் அது தொடர்பான அறிவும் கிடைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# நெடுஞ்சாலைத்துறையின் திட்டப்பணிகளை தரமாக உரிய காலத்தில் முடிக்க வேண்டும்: பொறியாளர்களுக்கு அமைச்சர் எ.வ.வேலு அறிவுறுத்தல்



சென்னை, மார்ச்.21

சென்னைதலைமை செயலகத்தில் 20242025ம் ஆண்டின், நெடுஞ்சாலைத்துறை திட்டப்பணிகளின் முன்னேற்றம் தொடர்பாகவும், 20252026ம் ஆண்டின் மானியக் கோரிக்கையில் இடம்பெறவேண்டிய கொள்கைகள் தொடர்பாகவும், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, நெடுஞ்சாலைத்துறை அலுவலர்களுடனநேற்று ஆய்வு மேற்கொண்டார். 2024 2025 நிதியாண்டில் நெடுஞ்சாலைத்துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டப் பணிகளை விரைவுப்படுத்துவது தொடர்பான நடவடிக்கைகள் குறித்து ஒவ்வொன்றாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

கூட்டத்தில் அமைச்சர் எ.வ.வேலு கூறியதாவது : திட்டப் பணிகளை தரமாக உரிய காலத்தில் முடித்து பொது மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டும். கட்டுமானம் மற்றும் பராமரிப்புப் பணிகள், தேசிய நெடுஞ்சாலைப் பணிகள், நபார்டு மற்றும் கிராமச் சாலைப் பணிகள், திட்டங்கள் அலகின் மூலம் மேற்கொள்ளும் பணிகள், சென்னைஎல்லைச்சாலைத் திட்டப் பணிகள், சென்னை பெருநகர மேம்பாட்டுப் பணிகள் போன்ற திட்டப் பணிகளை தனிக் கவனம் செலுத்தி உரிய காலத்தில் முடிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# அமலாக்கத்துறை தொடர்ந்த வழக்கு சிபிஐ நீதிமன்றத்தில் அமைச்சர் பொன்முடி ஆஜர்: நேரில் ஆஜராக விலக்களிக்க கோரி மனு தாக்கல்



சென்னை, மார்ச்.21

கடந்த 20062011ம் ஆண்டுவரை உயர்கல்வி மற்றும் கனிம வளங்கள், சுரங்கத் துறை அமைச்சராக க.பொன்முடி பதவி வகித்தபோது, விழுப்புரம் மாவட்டத்தில் அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிகளவில் செம்மண் வெட்டி எடுத்ததன்மூலம், அரசுக்கு 28 கோடியே 36 லட்சத்து 40 ஆயிரத்து 600 ரூபாய் இழப்பு ஏற்படுத்தியதாக லஞ்ச ஒழிப்புத் துறை வழக்குப்பதிவு செய்திருந்தது. இந்த வழக்கு விழுப்புரம் மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது. இந்நிலையில், இந்த விஷயம் தொடர்பாக அமலாக்கத்துறையும் வழக்கு தொடர்ந்தது. இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட சிபிஐ சிறப்பு நீதிமன்ற நீதிபதி எழில் வேலவன், குற்றம் சாட்டப்பட்ட பொன்முடி, கவுதம சிகாமணி, அசோக் சிகாமணி உள்ளிட்டோரை நேரில் ஆஜராக சம்மன் அனுப்பியிருந்தார். அதன்படி, அமைச்சர் பொன்முடி, அவரது மகன்கள் கவுதம சிகாமணி, அசோக் சிகாமணி உள்ளிட்டோர் சிபிஐ சிறப்பு நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகினர். அமைச்சராக இருப்பதால் அடுத்த கட்ட விசாரணைகளுக்கு நேரில் ஆஜராவதில் இருந்து விலக்களிக்க கோரி பொன்முடி தரப்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவுக்கு அமலாக்கத்துறை தரப்பில் பதிலளிக்க சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டது. பின்னர், பிணை பத்திரம் தாக்கல் செய்வதற்காக வழக்கின் விசாரணை தள்ளி வைக்கப்பட்டது.

# 2017 ஜல்லிக்கட்டு போராட்டத்தின்போது நடந்த வன்முறையில் கண் பார்வை பறிபோன இளைஞருக்கு ரூ.5 லட்சம் இழப்பீடு: தமிழக அரசுக்கு நீதிபதி உத்தரவு

சென்னை, மார்ச்.21

சென்னையில் நடைபெற்ற ஜல்லிக்கட்டு போராட்டத்தின் போது ஏற்பட்ட வன்முறையில் கண்பார்வை பறிபோனவருக்கு 5 லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்குமாறு தமிழக அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னைமெரினாகடற்கரையில் கடந்த 2017ம் ஆண்டு ஜனவரி மாதம் மிகப்பெரிய அளவில் ஜல்லிக்கட்டு போராட்டம் நடைபெற்றது. போராட்டத்தைபோலீசார்கலைத்தபோது வன்முறை ஏற்பட்டது. இதில் பலர்பாதிக்கப்பட்டனர். இந்நிலையில், திருவல்லிக்கேணி ரோட்டரிநகரைச்சேர்ந்தவிமலா என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்துள்ள வழக்கில் ஜல்லிக்கட்டு போராட்டத்தின் போது ஏற்பட்ட வன்முறையில் காவல்துறை தாக்கியதில் தனது மகன் கார்த்திக்கின் இடது கண் பாதித்து பார்வை பறிபோனது.

இதுகுறித்து ஓய்வு பெற்ற நீதிபதி ராஜேஸ்வரன் ஆணையத்தில் புகார் அளித்தோம். எனவே, சம்பந்தப்பட்ட காவல்துறையினர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். பார்வை பறிபோன தனது மகனுக்கு 50 லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும் என்று கோரியிருந்தார்.

இந்த மனு நீதிபதி ஜி.கே.இளந்திரையன் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ஆர்.திருமூர்த்தி, காவல்துறையால் தாக்கப்பட்டதில் பார்வை பறிபோனதற்கான மருத்துவ ஆவணங்கள் உள்ளன. இழப்பீடு வழங்குவது அரசின் கடமை என்று வாதிட்டார். காவல்துறை தரப்பில் ஆஜரான கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் கோபிநாத், போராட்டக்காரர்கள் வீசிய கற்களால்தான் கண் பார்வை பறிபோனது என்றார். இருதரப்பு வாதங்களை கேட்ட நீதிபதி, பார்வை பறிபோன இளைஞருக்கு 5 லட்சம் ரூபாய் இழப்பீட்டை 12 வாரங்களில் வழங்க வேண்டும் என்று தமிழக அரசுக்கு உத்தரவிட்டார்.

# சென்னை பெட்ரோலிய கழகம் 73 கோடி ரூபாய் இழப்பீடு செலுத்த வேண்டியதில்லை: தென் மண்டல தேசிய பசுமைத் தீர்ப்பாயம் தீர்ப்பு




சென்னை, மார்ச்.21

சென்னையில் கடந்த 2023ம் ஆண்டு டிசம்பர் மாதம் பெய்த அதிகன மழை காரணமாக பெரு வெள்ளம் ஏற்பட்டது. அப்போது, மணலி பகுதியில் உள்ள சென்னை பெட்ரோலிய கழக நிறுவனம் அருகில், பக்கிங்ஹாம் கால்வாய் வழியாக கடலில் எண்ணெய் படலம் பரவியது. இதன் காரணமாக அப்பகுதிகளில் மீன்கள் செத்து மிதந்தன. இதனால் ஏற்பட்ட சுற்றுச்சூழல் பாதிப்புகளுக்கு 73 கோடியே 68 லட்சம் ரூபாய் இழப்பீடாக செலுத்தும்படி சென்னை பெட்ரோலிய கழகத்துக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் உத்தரவிட்டது.

இந்தஉத்தரவைஎதிர்த்து சென்னை பெட்ரோலிய கழகம் தாக்கல் செய்த வழக்கு, தென் மண்டல தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தில் விசாரணைக்கு வந்தது. அப்போது, எண்ணெய் கசிவு குறித்து ஐ.ஐ.டி இன்னும்அறிக்கை தாக்கல் செய்யாத நிலையில் இழப்பீடு வழங்க உத்தரவிட்டது நியாயமற்றது என சென்னை பெட்ரோலிய கழகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, இழப்பீடாக 19 கோடி ரூபாயை வங்கி உத்தரவாதமாக நான்கு வாரங்களில் செலுத்த சென்னை பெட்ரோலிய கழகத்துக்கு உத்தரவிட்ட தீர்ப்பாயம், மாசுகட்டுப்பாட்டுவாறிய உத்தரவுக்கு தடை விதித்து உத்தரவிட்டது.

# மேல புல்லுவிளை கோயில் வளாகத்தில் நின்ற சந்தன மரம் வெட்டி கடத்தல்



நாகர்கோவில், மார்ச்.21

சுசீந்திரம் அருகே உள்ள மேல புல்லுவிளையில் பெருமாள்சுவாமிகோயில் உள்ளது. இந்த கோயில் வளாகத்தில் நின்ற பெரிய சந்தன மரத்தை மர்ம நபர்கள் சிலர் வெட்டி கடத்தி சென்றனர். இந்த காட்சிகள், அங்குள்ள கண்காணிப்பு கேமிராவில் பதிவாகி உள்ளது. 3 பேர் கொண்ட கும்பல் இந்த சம்பவத்தில் ஈடுபட்டு இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் தொடர்பாக ஊர் நிர்வாகிகள், சுசீந்திரம் காவல் நிலையத்துக்கு தகவல் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக புகார் மனுவும் அளித்துள்ளனர். இந்த சம்பவத்தில் ஈடுபட்ட கும்பலை உடனடியாக கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்த பகுதி பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# மாங்குயில், பனங்காடை, கள்ளப்புறா: பெரம்பலூரில் நடந்த கணக்கெடுப்பில் கண்டறியப்பட்ட பறவைகள்



பெரம்பலூர், மார்ச்.21

தமிழ்நாடு முழுவதும் சரணாலயம், ஆறு, ஏரி, குளங்களில் ஈரநில பறவைகள், நிலவாழ் பறவைகள் கணக்கெடுப்பு பணி 2 கட்டமாக நடந்தது. அதன்படி பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள 20 ஏரிகளில் வனத்துறை சார்பில் ஈரநில பறவைகள் கணக்கெடுக்கும் பணி கடந்த 9ம் தேதி நடந்தது. மாவட்ட வன அலுவலர் குகனேஷ் உத்தரவின்படி வனச்சரகர்கள் பெரம்பலூர் பழனிகுமரன், வேப்பந்தட்டை சுதாகர், சோமசுந்தரம், சமூக காடுகள் முருகானந்தம் ஆகியோர் இந்த பணியை மேற்கொண்டனர். குரும்பலூர்ஏரி, துறைமுகம் ஏரி, செஞ்சேரி ஏரி, அரணாரை ஏரி, பெரம்பலூர் ஏரி, அரும்பாவூர் சித்தேரி, பெரிய ஏரி, பூலாம்பாடி ஏரி, வெங்கலம் ஏரி, எசனை ஏரி, அத்தியூர் ஏரி, கீழப்புலியூர் ஏரி, எழுமூர் ஏரி, ஒகளூர் ஏரி, சிறுவாச்சூர் ஏரி உள்ளிட்ட 20 ஏரிகளில் கணக்கெடுப்பு பணி நடந்தது.

இதைதொடர்ந்து 2ம் கட்டமாக கடந்த 16ம் தேதி லாடபுரம் மயிலூற்று அருவி மற்றும் பெரம்பலூர், குரும்பலூர், தொண்டமாந்துறை, பூஞ்சோலை, வேப்பந்தட்டை, வெங்கலம், சந்திரமனை, சிறுவாச்சூர், பேரளி, குன்னம், சித்தளி, மங்கலம், அயன்பேரையூர் உள்ளிட்ட 20 பகுதிகளில் நிலவாழ் பறவைகள் கணக்கெடுக்கும் பணி நடந்தது. ஒருங்கிணைப்பாளர்களாக வனச்சரகர்கள் பழனிகுமரன், சுதாகர், சோம சுந்தரம், சமூக காடுகள் முருகானந்தன், வனவியல் விரிவாக்க மைய விளம்பர அலுவலர் சங்கரேஸ்வரி (எ) நாகஜோதி செயல்பட்டனர்.

இந்த கணக்கெடுப்பு பணிகளில் பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் வேளாண்மை கல்லூரி பேராசிரியர் வினோத் குமார் மற்றும் கல்லூரி மாணவர்கள், வேப்பந்தட்டை அரசு கல்லூரி விலங்கியல் துறை பேராசிரியர் ராமமூர்த்தி மற்றும் மாணவர்கள், குரும்பலூர் அரசு கல்லூரி மாணவர்கள் மற்றும் தன்னார்வலர்கள், வனத்துறையை சேர்ந்த வானவர்கள், வன காப்பாளர்கள் ஈடுபட்டனர். இதில் மாங்குயில், பனங்காடை, தேன்சிட்டு, மைனா, கள்ளப்புறா, கவுதாரி உள்ளிட்ட பல வகையான பறவைகள் அடையாளம் கண்டறியப்பட்டது.

இதில் ஒரு சில இடங்களில் வெளிநாட்டு வகை பறவைகளும் கண்டறியப்பட்டது. இதுகுறித்து மாவட்ட வன அலுவலர் குகனேஷ் தெரிவித்ததாவது: பெரம்பலூர் மாவட்டத்தில் முதற்கட்டமாக ஈரநில பறவைகள் கணக்கெடுப்பு பணி, 2ம் கட்டமாக நிலவாழ் பறவைகள் கணக்கெடுப்பு பணி நடந்தது.

இந்த கணக்கெடுப்பு பணியில் கண்டறியப்பட்ட பறவைகளின் எண்ணிக்கை தமிழ்நாடு அரசு வனத்துறை சார்பில் தெரிவிக்கப்படும் என்றார்.

# வரும் 22ம் தேதி வரை நடைபெறுகிறது அகில இந்திய காவல்துறை துப்பாக்கி சுடுதல் போட்டி




செங்கல்பட்டு, மார்ச்.21

தமிழ்நாடு காவல்துறை மூன்றாவது முறையாக அகில இந்திய காவல் துப்பாக்கி சுடும் போட்டியை நடத்துகிறது. 25வது அகில இந்திய காவல் துறை துப்பாக்கி சுடுதல் போட்டி 20242025 செங்கல்பட்டு மாவட்டம், ஒத்திவாக்கம், தமிழ்நாடு கமாண்டோபள்ளி பயிற்சி வளாகத்தில் உள்ள துப்பாக்கி சுடும் தளத்தில் 17.03.2025 முதல் 22.03.2025 வரை நடைபெறுகிறது.

25வது அகில இந்திய துப்பாக்கி சுடுதல் போட்டியின் பிரம்மாண்டமான தொடக்கவிழா ஊனமாஞ்சேரியில் உள்ள தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகம் கவாத்து மைதானத்தில் நடைபெறுவது தமிழக காவல்துறையின் பெருமைக்கு ஒரு மைல் கல் ஆகும். 25வது அகில இந்திய துப்பாக்கி சுடுதல் போட்டியை தமிழ்நாடு காவல்துறை இயக்குநர் / படைத்தலைவர் சங்கர் ஜீவால், துவக்கி வைத்தார்.

25வது அகில இந்திய துப்பாக்கி சுடுதல் போட்டி 202425ன் தலைவர் / ஏற்பாட்டு செயலாளர் காவல் துறை கூடுதல் இயக்குநர் தினகரன், தலைமை விருந்தினர் அவர்களை வரவேற்று, ஏற்பாட்டு குழு உறுப்பினர்கள், நடுவர் குழுவினர்கள், மேலாளர்கள் மற்றும் அதிகாரிகளை அறிமுகப்படுத்தினார். பின்னர் தமிழ்நாடு காவல் துறை இயக்குநர்/படைத் தலைவர் காவல்துறையினரின் அலங்கார அணிவகுப்புக்காப்பு மற்றும் கவாத்து மரியாதையை ஏற்றுக்கொண்டார். தலைமை விருந்தினர் தமிழ்நாடு காவல்துறைபின் தனிச்சிறப்பு வாய்ந்த சேவை மற்றும் அர்ப்பணிப்பு உணர்வை அங்கீகரிக்கும் உயரிய அங்கீகாரமான குடியரசு தலைவரின் நிஷான் வண்ணக்கொடிக்கு மரியாதை செலுத்தினார்.

தினகரன் காவல்துறை கூடுதல் இயக்குநர் ஆப்பரேஷன்ஸ் வரவேற்புரையாற்றினார்கள். தலைமை விருந்தினர் தமிழ்நாடு காவல்துறை இயக்குநர் / படைத்தலைவர் சங்கர்ஜிவால், நாடு முழுவதிலுமிருந்து வந்துள்ள காவல்துறை துப்பாக்கி சுடும் வீரர்களிடையேதுப்பாக்கி சுடும் போட்டியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

மேலும் துப்பாக்கி சுடுதல் போட்டி நெருக்கடியான சூழ்நிலைகளை கையாளுவதற்கு பயிற்றுவிக்கிறது என்றும் கூறினார்.

25வது அகில இந்திய காவல் துப்பாக்கி சுடும் போட்டி 2024-2025 ஐ. தலைமை விருந்தினர் அகில இந்திய காவல் கட்டுப்பாட்டு வாரியகொடியை ஏற்றி அதிகாரப்பூர்வமாக அறிவித்தார். அதனைத் தொடர்ந்து போட்டியில் பங்கேற்கும் அணிகளின் கொடிகள் ஏற்றப்பட்டன. துவக்கவிழா நிகழ்வு சத்தியபிரமாணம் எடுத்தும், தலைமை விருந்தினருக்கு நினைவு பரிசு வழங்கியும் நிறைவுற்றது.

# டாஸ்மாக் விவகாரம் தொடர்பாக அமலாக்கத்துறை மேற்கொண்டு விசாரணை நடத்த தடை கோரி வழக்கு

சென்னை, மார்ச்.21

டாஸ்மாக் விவகாரம் தொடர்பாக அமலாக்கத்துறை மேற்கொண்டு விசாரணை நடத்த தடை கோரி உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அமலாக்கத்துறையின் நடவடிக்கைக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் டாஸ்மாக்தரப்பில் 3 மனுக்கள் தக்கல் செய்யப்பட்டுள்ளது. டாஸ்மாக் தலைமை அலுவலகம் உள்ளிட்ட 20 இடங்களில் அண்மையில் அமலாக்கத்துறை சோதனை நடத்தியது.

சோதனையில் கைபற்றப்பட்ட ஆவணங்கள் தொடர்பாக அறிக்கையையும் அமலாக்கத்துறை வெளியிட்டது.

# பாம்பாறு நீர்த்தேக்கத்திலிருந்து நாளை முதல் 120 நாட்களுக்கு ஆயக்கட்டு பகுதிகளுக்கு பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிட அரசு ஆணை



சென்னை, மார்ச்.21

பாம்பாறு நீர்த்தேக்கத்திலிருந்து நாளை முதல் 120 நாட்களுக்கு ஆயக்கட்டு பகுதிகளுக்கு பாசனத்திற்கு வினாடிக்கு 42 கனஅடி தண்ணீர் திறந்துவிட தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், பாம்பாறு நீர்த்தேக்கத்திலிருந்து 20242025ஆம் ஆண்டுநீர்இருப்பை கணக்கில் கொண்டு 20.03.2025 முதல் 120 நாட்களுக்கு ஆயக்கட்டு பகுதிகளுக்கு பாசனத்திற்கு வினாடிக்கு 42.00 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிட அரசு ஆணையிட்டுள்ளது.

இதன் மூலம் கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டத்தில் 12 கிராமங்கள் மூலம் 2501 ஏக்கரும் தருமபுரி மாவட்டம், அரூர் வட்டத்தில் 4 கிராமங்கள் மூலம் 1499 ஏக்கரும் மொத்தம் 16 கிராமங்கள் மூலம் 4000 ஏக்கர் நிலங்கள் பாசனவசதி பெறும்.

# தமிழ்நாட்டு எல்லையில் இறக்கிவிடப்பட்ட கேரள நாய்கள்!



கேரளா, மார்ச்.21

கேரளாவில் இருந்து வாகனத்தில் ஏற்றிவரப்பட்ட 20 தெருநாய்கள், தமிழ்நாடு எல்லையிலுள்ள குமரி மாவட்டம் கட்டச்சல் பகுதியில் ஆள் நடமாட்டம் இல்லாத பகுதியில் இறக்கிவிட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. சோதனைச்சாவடியில் அதிகாரிகள் கேட்டபோது தடுப்பூசி போட நாய்களை அழைத்துச் சென்றதாக கூறியது அம்பலம்; நாய்களை இறக்கிவிட்ட வாகனத்தை பொதுமக்கள் பிடித்து களியல் காவல்துறையில் ஒப்படைத்தனர்

# ஐபிஎஸ் அதிகாரி செல்வநாகரத்தினத்துக்கு அனுப்பபட்ட குற்றக் குறிப்பாணைக்கு இடைக்கால தடை விதிக்க நீதிமன்றம் மறுப்பு

சென்னை, மார்ச்.21

ஐபிஎஸ் அதிகாரி செல்வநாகரத்தினத்துக்கு அனுப்பபட்ட குற்றக் குறிப்பாணைக்கு இடைக்கால தடை விதிக்க நீதிமன்றம் மறுப்பு தெரிவித்துள்ளது. ஐ.பி.எஸ் அதிகாரி செல்வநாகரத்தினம் திருமணம் செய்து கொள்வதாக கூறி ஏமாற்றியதாக 2019ல் பெண் ஒருவர் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கை விசாரித்த சிபிசிஐடி போலீஸ், செல்வநாகரத்தினம் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கக் கூறி அறிக்கை தாக்கல் செய்தார்.

இதனை அடுத்து டிஜிபி சார்பில் செல்வநாகரத்தினத்திற்கு மெமோ அனுப்பி, 30 நாட்களில் விளக்கமளிக்க உத்தரவிடப்பட்டது. மெமோவை எதிர்த்து நாகசெல்வரத்தினம் தாக்கல் செய்த மனுவை விசாரித்த நீதிமன்றம் மெமோவுக்கு தடை விதிக்க மறுப்பு தெரிவித்தது.

# இந்தியாவில் 343 மாவட்டங்களில் மட்டும் தங்கநகை ஹால்மார்க் முத்திரை கட்டாயம் ஆக்கியது ஏன்?: ஒன்றிய அரசுக்கு ஐகோர்ட் கிளை கேள்வி!




மதுரை, மார்ச்.21

இந்தியாவில் 803 மாவட்டங்கள் உள்ள நிலையில் 343 மாவட்டங்களில் மட்டும் ஹால்மார்க் கட்டாயம் ஆக்கியது ஏன்? என்று ஒன்றிய அரசுக்கு ஐகோர்ட் மதுரை கிளை நீதிபதிகள் கேள்வி நீதிபதிகள் எழுப்பியுள்ளனர். 2018ம் ஆண்டு ஒன்றிய அரசால் கொண்டுவரப்பட்ட தங்கநகை தரகட்டுப்பாடு சட்டத்தின் படி இந்தியாவில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் தங்க நகை விற்பனையின் போது ஹால்மார்க் முத்திரை பொறிப்பது கட்டாயமாக்கப்பட்டது. இந்த திட்டம் இந்தியாவில் உள்ள 803 மாவட்டங்களில் 343 மாவட்டங்களிலும், 36 மாநிலங்கள் யூனியன் பிரதேசங்களில் 25 மாநிலங்களில் மட்டுமே கட்டாய ஹால் மார்கிங் நடைமுறையில் உள்ளது.

ஆனாலும் பல்வேறு மாநிலங்கள் மற்றும் பல்வேறு மாவட்டங்களில் தற்போது வரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. குறிப்பாக தமிழ்நாட்டிலும் பல மாவட்டங்களில் இந்த நடைமுறை பின்பற்றப்படவில்லை. இதனால் தரமற்ற தங்க நகைகள் விற்பனை செய்ய வாய்ப்புள்ளது. எனவே தரமான தங்கநகை விற்பனை செய்வதை உறுதிப்படுத்தும் வகையில் இந்தியாவில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் தங்க நகை விற்பனைக்கு ஹால் மார்க் முத்திரையை பயன்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்து உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த மனு இன்று நீதிபதிகள் நிஷா பானு, ஸ்ரீமதி அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. இந்தியாவில் 803 மாவட்டங்கள் உள்ள நிலையில் 343 மாவட்டங்களில் மட்டும் ஹால்மார்க் கட்டாயம் ஆக்கியது ஏன்? என்றும் 343 மாவட்டத்தில் மட்டும் ஹால்மார்க் கட்டாயமாக்கினால் மற்ற மாவட்டத்தில் முறைகேடுகள் நடக்காதா? என்றும் ஒன்றிய அரசுக்கு நீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.

மேலும், விரிவான பதில் மனு தாக்கல் செய்ய ஒன்றிய அரசுக்கு உயர்நீதிமன்றம் மதுரை கிளை உத்தரவிட்டு வழக்கின் விசாரணையை ஒத்திவைத்தது.

# 29ம் தேதி தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்



சென்னை, மார்ச்.21

சென்னை மாவட்ட கலெக்டர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே வெளியிட்ட அறிவிப்பு: வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் கீழ் இயங்கும் சென்னை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் சார்பில் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் வருகிற 29ம் தேதி நந்தனம் அரசு கலைக் கல்லூரியில் காலை 8 மணி முதல் மாலை 3 மணி வரை நடத்தப்பட உள்ளது.

இவ்வேலைவாய்ப்பு முகாமில் 200க்கும் மேற்பட்ட முன்னணி தனியார் துறை நிறுவனங்கள் கலந்து கொள்கின்றன. www.tnprivatejobs.tn.gov.in என்ற இணையதளத்தில் பதிவு செய்து, இந்த வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

# திமுக ஆட்சியில் விவசாயிகளுக்கு இதுவரை 2 லட்சம் இலவச மின் இணைப்பு: அமைச்சர் செந்தில் பாலாஜி தகவல்

சென்னை, மார்ச்.21

தமிழக சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின் போது, பரமத்தி வேலூர் சேகர்(அதிமுக) பேசுகையில், '' விவசாய இலவச மின்சாரம் 31/3/2013 வரைதான் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, அதிகப்படியான இலவச மின் இணைப்புகளை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

இதற்கு பதிலளித்து அமைச்சர் செந்தில் பாலாஜி பேசியதாவது: திமுக ஆட்சி பொறுப்பேற்ற பின்பு, பதிவு செய்து காத்திருந்த விவசாயிகள், 2 லட்சம் விவசாயிகளுக்கு மின் இணைப்புகள் வழங்குவதற்கான அறிவிப்புகள் வெளியிடப்பட்டு, வழங்கப்பட்டிருக்கின்றன. கூடுதலாக பதிவு செய்து காத்திருக்கிறவர்களுக்கு இந்தஆண்டுமுன்னுரிமை அடிப்படையில் வழங்க நடவடிக்கை எடுக்கும்.

# சென்னையில் ரூ.2000 கட்டணத்தில் பஸ் பாஸ் ஏசி தொடங்கி சாதாரண பேருந்து வரை விருப்பம்போல் பயணிக்கலாம்: அறிமுகம் செய்து வைத்தார் அமைச்சர்




சென்னை, மார்ச்.21

மாநகர போக்குவரத்து கழகம் மூலம் 50 குளிர்சாதன(ஏசி) பேருந்துகள் உள்பட 3,056 பேருந்துகள் நாள்தோறும் இயக்கப்படுகின்றன. இப்பேருந்துகள் மூலம் லட்சக்கணக்கான மக்கள் தினசரி பயணிக்கிறார்கள். அலுவலகம் செல்வோருக்கு வசதியாக இருவழி பயண அட்டை, விருப்பம்போல் பயணிக்க மாதாந்திர பயண அட்டை என பல்வேறு சலுகை கட்டணங்களை மாநகர் போக்குவரத்து கழகம் இதுவரையில் வழங்கி வருகிறது. இதில் மாதம்தோறும் ரூ.1,000 கட்டணமாக செலுத்தி பெறப்படும் பயணச் சலுகை அட்டை மூலம் மாநகரப் போக்குவரத்துக் கழகத்தின் கீழ் இயங்கும் குளிர்சாதனப் பேருந்துகளை தவிர்த்து, சாதாரணப் பேருந்து, விரைவுப் பேருந்து, சொகுசுப் பேருந்து, சிற்றுந்து ஆகியவற்றில் பயணிகள் விருப்பம்போல் பயணிக்கலாம்.

இந்த நிலையில், பயணிகளுக்கு மேலும் ஒரு சலுகையாக ரூபாய் 2000க்கு புதிய பயண சலுகை கட்டண அட்டையை போக்குவரத்து துறை அறிமுகப்படுத்தி உள்ளது. இந்த புதிய சலுகை கட்டண அட்டை மூலம் குளிர்சாதனப் பேருந்துகளிலும் பயணிகள் விருப்பம் போல் பயணம் செய்யலாம். இந்த அட்டையைப் பெறுபவர்கள் மாநகர் போக்குவரத்து கழகம் மூலம் இயக்கப்படும், குளிர்சாதனபேருந்து, சாதாரணப் பேருந்து, விரைவுப் பேருந்து, சொகுசுப் பேருந்து, சிற்றுந்து ஆகியவற்றில் பயணிகள் விருப்பம்போல் பயணிக்கலாம்.

தற்போது கோடை காலம் துவங்குவதால் வெப்பம் தணிக்க பலரும் ஏசி பேருந்துகளில் பயணம் செய்ய ஆர்வம் காட்டுவார்கள் என்பதை கருத்தில் கொண்டு ரூ.2,000 கட்டணம் கொண்ட பயண அட்டை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

தற்போது திருப்போரூர், சிறுசேரி டெக் பார்க், கிளாம்பாக்கம் உள்ளிட்ட பகுதிகளில் ஏசி பேருந்துகள் இயக்கப்படுகின்றன. புதிய பேருந்துகள் வந்ததும், தேவைக்கேற்ப பல்வேறு வழித்தடங்களிலும் இயக்க திட்டமிட்டுள்ள மாநகர் போக்குவரத்து கழகம் அதற்காக 225 ஏசி பேருந்துகள் உட்பட 650 மின்சார பேருந்துகளை விரைவில் கொள்முதல் செய்யப்படவுள்ளது. இத்திட்டத்தை போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கர் மந்தவெளி பேருந்து நிலையத்தில் அறிமுகம் செய்து வைத்தார்.

★ ஆட்டோ சங்கங்களுடன் பேச்சுவார்த்தை..

ரூ.2000 பாஸ் திட்டத்தை தொடங்கி வைத்த அமைச்சர் சிவசங்கர் நிருபர்களிடம் கூறியதாவது: ஆட்டோ சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி இருக்கிறோம். பேச்சுவார்த்தையின் அடிப்படையில் பிரச்னைக்கு சுமூக தீர்வு காண்போம். குறிப்பிட்ட சில சங்கங்கள் தான் போராட்டம் நடத்துகின்றனர். முடிவு எட்டப்படுகின்ற நேரத்தில் பொது மக்களுக்கு பாதகமான ஏற்படுகின்ற சூழலை ஏற்படுத்த வேண்டாம் என கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

# மண்டலம் 14,15,16 ஆகிய பகுதிகளில் வரும் 21 முதல் 26 வரை குடிநீர் நிறுத்தம்: சென்னை குடிநீர் வாரியம் தகவல்

சென்னை, மார்ச்.21

சென்னை குடிநீர் வாரியம்வெலியிட்டஅறிக்கை: நெம்மேலியில் அமைந்துள்ள நாளொன்றுக்கு 110 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதால் அடையாறு, பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் மண்டலங்களுக்குட்பட்ட சில பகுதிகளில் வரும் 21 முதல் 26ம் தேதி வரை குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.

மண்டலம் 13 (அடையாறு) திருவான்மியூர், மண்டலம் 14 (பெருங்குடி) கொட்டிவாக்கம் பகுதியில் மார்ச் 21,23,25 ஆகிய தேதிகளிலும், மண்டலம் 15 (சோழிங்கநல்லூர்) ஈஞ்சம்பாக்கம், நீலாங்கரை, வெட்டுவான் கேணி, உத்தண்டி, மண்டலம் 14 (பெருங்குடி) பெருங்குடி, பாலவாக்கம், காரப்பாக்கம், மண்டலம் 15 (சோழிங்கநல்லூர்) சோழிங்கநல்லூர், ஒக்கியம்துரைபாக்கம் ஆகிய பகுதிகளில்மார்ச்22,24,26 ஆகிய தேதிகளிலும் குடிநீர் விநியோகம் நிறுத்தப்படவுள்ளது.

எனவே, பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக, போதுமான அளவு குடிநீரை சேமித்து வைத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் குடிநீர் பெற்றுக் கொள்ள வாரியத்தின் https://cmwssb.tn.gov.in/ என்ற இணையதள முகவரியினை பயன்படுத்தி பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு குடிநீர் தொட்டிகள் மற்றும் தெரு நடைகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எந்தவித தடையுமின்றி வழக்கம்போல் சீரான முறையில் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# பயணிகளின் பாதுகாப்பை மேம்படுத்தவும், சௌகரியமான பயணத்தை உறுதிப்படுத்தவும் 2 ரயில்களுக்கு LHB பெட்டிகள்: தென்னக ரயில்வே அறிவிப்பு



சென்னை, மார்ச்.21

பயணிகளின் பாதுகாப்பை மேம்படுத்தவும், சௌகரியமான பயணத்தை உறுதிப்படுத்தவும், பின்வரும் ரயில்களின் LHB பெட்டிகளாக மாற்றப்படும் என தென்னக ரயில்வே அறிவித்துள்ளது. அதில்,

ரயில்எண்22616/22615 கோயம்புத்தூர் – திருப்பதி – கோயம்புத்தூர் சூப்பர்ஃபாஸ்ட் எக்ஸ்பிரஸ், 20 மார்ச் 2025 முதல் கோயம்புத்தூர் மற்றும் திருப்பதியில் இருந்து LHB பெட்டிகளுடன் இயக்கப்படும்.ரயில் எண் 22617/22618 திருப்பதி – SMVT பெங்களூரு – திருப்பதி சூப்பர்ஃபாஸ்ட் எக்ஸ்பிரஸ் (காட்பாடி, ஜோலார்பேட்டை வழியாக இயக்கப்படும்),

21 மார்ச் 2025 முதல் திருப்பதியில் இருந்தும், 22 மார்ச் 2025 முதல் SMVT பெங்களூருவில் இருந்தும் LHB பெட்டிகளுடன் இயக்கப்படும்.

LHB பெட்டிகள் அமைப்பு ரயில் எண் 22616/22615 கோயம்புத்தூர் – திருப்பதி – கோயம்புத்தூர் சூப்பர்ஃபாஸ்ட் எக்ஸ்பிரஸ் மற்றும் ரயில் எண் 22617/22618 திருப்பதி – SMVT பெங்களூரு – திருப்பதி சூப்பர்ஃபாஸ்ட் எக்ஸ்பிரஸ் ஆகியவற்றின் பெட்டி அமைப்பு பின்வருமாறு மாற்றியமைக்கப்படும். 1 ஏசி நாற்காலி பெட்டி, 9 இரண்டாம் வகுப்பு நாற்காலி பெட்டிகள், 8 பொது இரண்டாம் வகுப்பு பெட்டிகள், 1 இரண்டாம் வகுப்பு பெட்டி (மாற்றுத்திறனாளிகள் பயணிக்க ஏற்ற வடிவமைப்பு), மற்றும் 1 பொருட்கள் வைக்கும் பெட்டியுடன் ஒருங்கிணைந்த பிரேக் வேன்.

இவ்வாறு தெரிவித்துள்ளது.

# திருவண்ணாமலை தீபமலையில் பரபரப்பு: தியானத்துக்கு அழைத்து சென்று பிரான்ஸ் பெண் பலாத்காரம்: வாலிபர் கைது



திருவண்ணாமலை, மார்ச்.21

திருவண்ணாமலை தீபமலையில் தியானம் செய்தவற்காக பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த 30 வயதுள்ள பெண், கடந்த சில நாட்களாக திருவண்ணாமலையில் தங்கியுள்ளார். நேற்று முன்தினம் தீபமலையில் உள்ள கந்தாஸ்ரமம் அருகே வெளிநாட்டு பெண் சென்றபோது, அவரை மிரட்டி வாலிபர் ஒருவர் பாலியல் வன்கொடுமையில் ஈடுபட்டுள்ளார். அவரிடமிருந்து தப்பி வந்த வெளிநாட்டு பெண், திருவண்ணாமலை மேற்கு போலீஸ், பிரான்ஸ் நாட்டு தூதரகத்துக்கும் புகார் தெரிவித்தார். போலீசார் விசாரணை நடத்தி, திருவண்ணாமலை பே கோபுரம் தெருவைச் சேர்ந்த வெங்கடேசன்(36) என்பவரை நேற்று முன்தினம் இரவு கைது செய்தனர். விசாரணையில், கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக சுற்றுலா வழிகாட்டி என கூறி பல மொழிகளில் பேசி வெளிநாட்டு சுற்றுலா பயணிகளிடம் அவர் மோசடியில் ஈடுபட்டது தெரியவந்துள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன்பு ஆஸ்ரமத்துக்கு வந்த பிரான்ஸ் நாட்டு இளம் பெண்ணிடம், தன்னை சுற்றுலா வழிகாட்டி என்று கூறி பிரெஞ்ச் மொழியில் பேசி அறிமுகமாகியுள்ளார். மலைமீது சென்று தியானம் செய்தால் பலன் கிடைக்கும் என நம்ப வைத்து, இளம் பெண்ணை கந்தாஸ்ரமம் வழியாக மலைக்கு அழைத்துச்சென்று, ஆட்கள் நடமாட்டம் இல்லாத பகுதியில் பாலியல் பலாத்காரம் செய்து செல்போனில் படம் பிடித்து மிரட்டியது தெரியவந்துள்ளது. பின்னர் மருத்துவமனைக்கு பரிசோதனைக்காக அழைத்துச்சென்றபோது, வாகனத்தில் இருந்து கீழே விழுந்து வெங்கடேசன் கால் எலும்பு முறிந்தது. எனவே, அரசு மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர்.

# நெல்லையில் ஓய்வு பெற்ற எஸ்ஐ கொலை வழக்கு: காவல் ஆய்வாளர் பணியிடைநீக்கம்


திரு. கோபாலகிருஷ்ணன்
காவல் ஆய்வாளர்

நெல்லை, மார்ச்.21

நெல்லையில் ஓய்வு பெற்ற எஸ்ஐ கொலை வழக்கில் காவல் நிலைய ஆய்வாளர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டார். ஜாஹிர் உசேன் நேற்றைய தினம் மர்ம நபர்களால் வெட்டி படுகொலை செய்யப்பட்ட நிலையில், இந்த சம்பவம் தொடர்பாக 2 பேர் திருநெல்வேலி மாவட்ட நீதிமன்றத்தில் சரணடைந்தனர். முக்கிய குற்றவாளியாக இருந்த கிருஷ்ணமூர்த்தியை தேடும் பணியில் 3 தனிப்படைகள் அமைக்கப்பட்டு தேடி வருகிறது. தொடர்ந்து அவர் மதுரையில் பதுங்கி இருப்பதாகவும் அங்கே அவரை கைது செய்வதற்கு தனிப்படை போலீசார் அங்கு சென்றிருப்பதாகவும் தகவல் வெளியாகியது.

இந்த நிலையில் ஜாஹிர் உசேன் அவர் இறப்பதற்கு முன்பாக சமூக வலைத்தளத்தில் ஒரு வீடியோ வெளியிட்டிருந்தார்.

அந்த வீடியோவில் தான் நிச்சயமாக கொலை செய்யப்பட்டுவிட கூடும். இது தொடர்பாகதிருநெல்வேலி காவல் நிலையத்தில் புகார் அளித்திருந்தும் காவல் ஆய்வாளராக இருக்கக்கூடிய கோபாலகிருஷ்ணன் இது குறித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதுமட்டுமல்லாமல் செந்தில்குமார் என்ற உதவி ஆணையாளர் இதில் நடவடிக்கை எடுக்கவில்லை என்று வீடியோ வெளியிட்டிருந்தார். இது தொடர்பான விரிவான விசாரணை நடைபெற்று வந்த நிலையில் இன்றைய தினம் அவரது உடலை பெறுவதற்கான நிபந்தனைகளை வைத்திருந்தனர். இந்த நிலையில், திருநெல்வேலி மாநகரப்பகுதியில் காவல் ஆணையரான சந்தோஷ் ஹதிமணி நேற்றைய தினம் கொலை செய்யப்பட்ட ஜாஹிர் உசேன் வீட்டிற்கு சென்று பேச்சுவார்த்தை நடத்தினார். பேச்சுவார்த்தையில்,

இதில் முக்கிய பங்காற்றிய கோபாலகிருஷ்ணன், செந்தில் குமார் பணியிடை நீக்கம் செய்யப்பட வேண்டும். செந்தில் குமார் தற்போது திருநெல்வேலியில் பணியாற்றவில்லை இங்கிருந்து பணி மாறுதலாக கோயம்பத்தூர் சென்றுள்ள நிலையில் அவர் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருந்தனர். காவல்துறையின் தீவிர விசாரணைக்கு பிறகாக சந்தோஷ் ஹதிமணிவின் உத்தரவின் பேரில் கோபாலகிருஷ்ணன் பணியிடை நீக்கம் செய்ப்பட்டுள்ளார். அதுமட்டுமல்லாமல் இங்கிருந்து பணிமாற்றம் செய்யப்பட்ட செந்தில் குமார் மீதும் நடவடிக்கை எடுப்பதற்கு காவல் துறை இயக்குனருக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாகவும் சந்தோஷ் ஹதிமணியின் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மதுரை பாஜ நிர்வாகி மர்மச்சாவு



மதுரை, மார்ச்.21

மதுரை, எஸ். ஆலங்குளம் பகுதியை சேர்ந்தவர் கருப்பசாமி (48). இவர் பாஜ செல்லூர் மண்டல ஓபிசி அணி மாவட்ட செயலாளர். இவர் கடந்த 17ம் தேதி காரில் வெளியூருக்கு சென்றவர் வீடு திரும்பவில்லை. இதற்கிடையில் கூடல்புதூர் பகுதியில் காரில் கருப்பசாமி சடலமாக நேற்று மீட்கப்பட்டார். காருக்குள் கருப்பசாமி எப்படி இறந்தார்? கொலை செய்யப்பட்டாரா? தற்கொலையா என சந்தேகம் எழுந்தது. இந்நிலையில் கருப்பசாமி மூச்சுத் திணறலால் உயிரிழந்துள்ளதாக போலீசார் தெரிவித் துள்ளனர்.

# தூத்துக்குடி: பெட்ரோல் போட்ட அடுத்த நொடி மளமளவென பற்றி எரிந்த பைக்

தூத்துக்குடி, மார்ச்.21

தூத்துக்குடியில் உள்ள பெட்ரோல் பங்க் ஒன்றில் உத்தரபிரதேசமாநிலத்தை சேர்ந்த முகமது சவேரியார் தனது பைக்கிற்கு பெட்ரோல்போடவந்தார். பெட்ரோல் போட்ட பின்னர் வாகனத்தை இயக்க முயற்சித்தார். அப்போது பைக்கானது திடீரென மளமள வென தீ பற்றி எரியத்தொடங்கியது.

அங்கு பெட்ரோல் போட வந்தவர்கள் இதனைக்கண்டு அதிர்ச்சியடைந்தனர். உடனே சுதாரித்துக்கொண்ட பெட்ரோல் பங்க் ஊழியர்களின் தீயை அணைத்ததால் பெரும் சேதம் தவிர்க்கப்பட்டது.

தின கனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

21.3.2025

# கண்மாயில் கருகிய நிலையில் சடலம்: சிவகங்கை போலீஸ்காரர் எரித்துக் கொலை



அவனியாபுரம், மார்ச்.21

மதுரை அவனியாபுரம் ரிங் ரோடு அருகே புதுக்குளம் கண்மாய் பகுதியில் பாதி எரிந்த நிலையில் கிடந்த சடலத்தை பெருங்குடி போலீசார் மீட்டனர். விசாரணையில் மீட்கப்பட்டவர், விருதுநகர் மாவட்டம், திருச்சுழி அருகே அழகாபுரி கொக்குளம் கிராமத்தைச் சேர்ந்த மலையரசன் (36) என்பது தெரியவந்தது. இவர் சிவகங்கை மாவட்டம், காளையார் கோவிலில் தனிப்படை பிரிவில் காவலராக பணியாற்றி வந்தார். இவருக்கு மனைவி, 2 ஆண் குழந்தைகள்உள்ளனர்.மனைவி பாண்டிச்செல்வி, கடந்த வாரம் திருச்சுழி – ராமநாதபுரம் சாலையில் மிளகனூர் அருகே வாகன விபத்தில் சிக்கி, சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். மனைவி சிகிச்சை பெற்ற மருத்துவமனையில் கட்டணம் தொடர்பான ரசீது உள்ளிட்ட ஆவணங்களை வாங்குவதற்காக மலையரசன் மதுரை வந்ததாக கூறப்படுகிறது.

இந்த சூழலில்தான் மருத்துவமனையில் இருந்து 2 கிமீ தொலைவில் உள்ள புதுக்குளம் கண்மாய் பகுதியில் பாதி எரிந்த நிலையில் பிணமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார். யாரேனும் இவரை கொலை செய்து எரித்து விட்டு சென்றனரா அல்லது மனைவி இறந்த துக்கத்தில் தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டாரா? என பெருங்குடி போலீசார் தீவிரமாக விசாரித்து வருகின்றனர். மருத்துவமனைக்கு அருகே சாலையோரத்தில் மலையரசனின் செல்போனும், மாட்டுத்தாவணி பஸ் ஸ்டாண்ட் பகுதியில் அவரது டூவீலரும் நிறுத்தப்பட்டிருப்பதும் தெரியவந்துள்ளது. மலையரசன் உடலை வாங்க மறுத்து அவரது உறவினர்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

# தெரு நாய்கள் கடித்து மரணம் அடையும் கால் நடைகளுக்கு உரிய இழப்பீடு வழங்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார்: அமைச்சர் ஐ. பெரியசாமி தகவல்

சென்னை, மார்ச்.21

தமிழகத்தில் தொடர்ந்து அதிகரித்து வரும் நாய் கடி சம்பவம் தொடர்பாகவும், நாய்கடித்துமரணம்அடையும் கால்நடைகளுக்கு இழப்பீடு வழங்குவது தொடர்பாக அதிமுக சட்டமன்ற உறுப்பினர் கே சி கருப்பண்ணன் மற்றும் பாஜக சட்டமன்ற உறுப்பினர் வானதி சீனிவாசன் சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்து பேசினர்.

இதற்கு பதில் அளித்து ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் அமைச்சர் ஐ. பெரியசாமி பேசுகையில்,



“சமீப காலங்களில் தெரு நாய்கள் கடித்து வெள்ளாடு, செம்மறி ஆடுகள் பாதிக்கப்படுவதாக அரசின் கவனத்திற்கு வந்துள்ளது. தெரு நாய்கள் கடித்து மரணம் அடையும் கால்நடைகளுக்கு பேரிடர் மேலாண்மை விதிகளின் படி உரிய இழப்பீடு வழங்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

இதன்படி, மாடு இறந்தால் 37500, ஆடு 6 ஆயிரம், கோழி 200 இழப்பீடு வழங்க உத்தரவிட்டுள்ளது. இதுவரை தெருநாய் கடித்து உயிரிழந்த 1149 பிராணிகளுக்கு இழப்பீடு வழங்க 42 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது” என்றார். தொடர்ந்து அமைச்சர் கே.என்.நேரு பேசுகையில் “தெருநாய்கள் பிரச்னை தொடர்பாக நேற்று முன் தினமே உரிய விளக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது.

வெறிநாய்களை பிடித்து அவற்றிற்கு ஊசி செலுத்தி குணமடைந்த பின் மீண்டும் விட்டுவிட வேண்டும் என சட்டம் சொல்கிறது. வெறிநாய்களை கட்டுப்படுத்த உச்சநீதி மன்றத்தில் சிறப்பு மனு தாக்கல் செய்து உத்தரவு பெற்றால் தான் தீர்வு கிடைக்கும், இருப்பினும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய இழப்பீட்டுத் தொகையைமுதலமைச்சர் அறிவித்து உள்ளார்.இவ்வாறு அவர் பதில் அளித்தார்.

# போதையில் பைக் ஓட்டிய விவகாரம் போலீசார் தாக்கியதால் வாலிபர் தற்கொலை: நாமக்கல் அருகே காவல் நிலையம் முற்றுகை

நாமக்கல், மார்ச்.21

நாமக்கல் மாவட்டம், வேலகவுண்டம்பட்டியை அடுத்த தட்டாரபாளையத்தைச் சேர்ந்தவர் கொண்டப்பன். இவரது மகன் மணிகண்டன்(23). இவர் நேற்று முன்தினம் இரவு வேலகவுண்டம்பட்டியில் இருந்து வீட்டிற்கு பைக்கில் சென்று கொண்டிருந்தார். இரவு 10 மணியளவில், நல்லாயிகோயில் அருகே வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்த வேலகவுண்டம்பட்டி எஸ்எஸ்ஐ



மோகன், ஏட்டு மணிகண்டன் ஆகியோர் பைக்கை நிறுத்தும்படி கூறினர். ஆனால்,அவர்நிறுத்தாமல் சென்றதால் விரட்டி சென்று பிடித்தனர்.

அப்போது, மணிகண்டன் குடிபோதையில் இருந்ததால், போலீசார் அவர் மீது போதையில் வாகனம் ஓட்டியது, ஓட்டுநர் உரிமம் இல்லாதது உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்தனர். அப்போது ஏற்பட்ட தகராறில் போலீசார் மணிகண்டனை தாக்கியதாக கூறப்படுகிறது. இந்நிலையில் மணிகண்டன் நேற்று காலை வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். அவரது தற்கொலைக்கு போலீசாரே காரணம் எனக் கூறி, உறவினர்கள் 200க்கும் மேற்பட்டோர் சடலத்துடன் நேற்று பிற்பகல் வேலகண்டம்பட்டி காவல் நிலையத்தை முற்றுகையிட்டு மறியலில் ஈடுபட்டனர்.

எஸ்ஐ சஸ்பெண்ட்: இந்த சம்பவம் குறித்து, நாமக்கல் மாவட்ட எஸ்பி ராஜேஸ்கண்ணன் விசாரணை நடத்தி, எஸ்எஸ்ஐ மோகனை, சஸ்பெண்ட் செய்து நேற்றிரவு உத்தரவிட்டார்.

# நெல்லையில் காவல் அதிகாரி கொலை வழக்கில் தேடப்பட்ட நபர், துப்பாக்கி சூடு நடத்தி பிடிப்பு

நெல்லை, மார்ச்.21

நெல்லைடவுன்ஜாமியா தைக்கா தெருவை சேர்ந்தவர் ஜாகீர் உசேன் பிஜிலி (வயது 60). இவர் தமிழ்நாடு காவல்துறையில் சப் இன்ஸ்பெக்டராக பணியாற்றியவர். கடந்த 2009ம் ஆண்டு சென்னையில் பணியாற்றிய போது விருப்ப ஓய்வு பெற்றார். அதன்பின்னர் நெல்லை டவுன் பகுதியில் உள்ள ஒரு பள்ளிவாசலில் முத்தவல்லியாக இருந்து வந்தார். இவருக்கு மனைவி, ஒரு மகன், மகள் உள்ளனர்.

நேற்று அதிகாலையில் ஜாகீர்உசேன்பிஜிலி பள்ளிவாசலில் தொழுகைக்கு சென்றார். தொழுகையை முடித்துவிட்டு அங்குள்ள தெற்கு மவுண்ட்ரோடு வழியாக தனது வீட்டிற்கு நடந்து சென்று கொண்டு இருந்தார். அப்போது, அங்கு ஒரு மோட்டார் சைக்கிளில் 3 மர்மநபர்கள்





வந்தனர். அவர்கள் திடீரென்று தாங்கள் மறைத்து வைத்திருந்த அரிவாளால் ஜாகீர் உசேன் பிஜிலியை சரமாரியாக வெட்டினார்கள். இதில் ரத்த வெள்ளத்தில்சம்பவ இடத்திலேயே துடிதுடித்து பரிதாபமாக இறந்தார். இந்த வெறிச்செயலில் ஈடுபட்ட மர்மநபர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டனர்.

இந்த கொலை தொடர்பாக நெல்லை 3வது ஜூடிசியல் மாஜிஸ்திரேட்டு கோர்ட்டில் டவுன் தொட்டிபாலம் தெருவை சேர்ந்த மகபூப்ஜான் மகன் அக்பர்ஷா (32), பால்கட்டளை பகுதியை சேர்ந்த சங்கரன் மகன் கார்த்திக் (32) ஆகியோர் சரண் அடைந்தனர். அவர்களை டவுன்போலீசார்காவலில் எடுத்து விசாரணை நடத்த உள்ளனர். இந்த விசாரணைக்கு பின்னரே கொலைக்கான முழு காரணமும் தெரியவரும் என போலீசார் தெரிவித்தனர்.

இந்த கொலை தொடர்பாக டவுன் போலீசார் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள்.

இந்த நிலையில், நெல்லையில் ஓய்வு பெற்ற சப் இன்ஸ்பெக்டர் ஜாகீர் உசேன் கொலை வழக்கில் தேடப்பட்டு வந்த குற்றவாளி, துப்பாக்கிசூடு நடத்தி பிடிக்கப்பட்டுள்ளார். ரெட்டியார்பட்டி பகுதியில் பதுங்கியிருந்த முகமது தவுபிக் (எ) கிருஷ்ணமூர்த்தியை சுற்றி வளைத்துப் பிடிக்கும்போது, போலீசாரை அவர் அரிவாளால் வெட்டினார். அப்போது சுதாரித்துக்கொண்ட போலீசார் துப்பாக்கி சூடு நடத்தி முகமது தவுபிக்கை கைதுசெய்தனர்.துப்பாக்கி சூட்டில் காயமடைந்த அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# எண்ணெய் கசிவு விவகாரத்தில் சி.பி.சி.எல். ரூ.73 கோடி இழப்பீடு செலுத்தக் கோரிய உத்தரவுக்கு தடை விதிப்பு

சென்னை, மார்ச்.21

2023ல்எண்ணெய்கசிவு விவகாரத்தில் சி.பி.சி.எல். ரூ.73 கோடி இழப்பீடு செலுத்தக் கோரிய உத்தரவுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் பிறப்பித்த உத்தரவுக்கு தென்மண்டல தேசிய பசுமைத் தீர்ப்பாயம் தடை விதித்து ள்ளது. சென்னையில் 2023ல் வெள்ளம் ஏற்பட்டபோது மணலியில் உள்ள சிபிசிஎல் நிறுவனத்தில் இருந்து எண்ணெய் கசிவு ஏற்பட்டது. எண்ணெய் கசிவு குறித்து ஐ.ஐ.டி. இன்னும் அறிக்கை தாக்கல் செய்யாத நிலையில் இழப்பீடு கோருவது நியாயமற்றது. இழப்பீடாக ரூ.19 கோடியை வங்கி உத்தரவாதமாக 4 வாரத்தில் செலுத்த சிபிசிஎல் நிறுவனத்துக்கு தீர்ப்பாயம் உத்தரவு அளித்துள்ளது.

# விஜய் சேதுபதி, நித்யா மேனன் நடித்துள்ள படத்தின் தலைப்பு இதுவா?



இயக்குநர் பாண்டிராஜ் இயக்கத்தில் நடிகர் விஜய் சேதுபதி நடிப்பில் புதிய படம் உருவாகி வருகிறது. இப்படத்தின் படப்பிடிப்பு கடந்தாண்டே துவங்கி நடைபெற்று வந்தது. இதில் நித்யா மேனன், யோகி பாபு முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். ஏற்கனவே 19 (1) (ஏ) என்ற மலையாள படத்தில் நடிகர் விஜய் சேதுபதியும் நித்யா மேனனும் இணைந்து நடித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்படத்தின் படப்பிடிப்பு முழுமையாக நிறைவடைந்துள்ளதாக சமீபத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது . குடும்பப் பின்னணியைக் கதையாக வைத்தே படம் உருவாகியுள்ளதாம். விஜய் சேதுபதி இயக்குநர் பாண்டிராஜ் இணையும் முதல் படமென்பதால் ரசிகர்களிடம் எதிர்பார்ப்பு நிலவுகிறது.

சத்யஜோதி பிலிம்ஸ் நிறுவனம் தயாரித்துள்ள இந்த படத்தில் விஜய் சேதுபதி பரோட்டா மாஸ்டராக நடித்துள்ளதாக சொல்லப்படுகிறது. இந்த நிலையில் இப்படத்தின் புதிய தகவல் ஒன்று வெளியாகி உள்ளது. அதன்படி, இப்படத்திற்கு "ஆகாசவீரன்" என்ற தலைப்பு வைக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இந்த ஆண்டின் இறுதியில் படம் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் புதிய தலைவர் யார்?



சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் (ஐ.ஒ.சி.) சிறப்பு கூட்டம் கிரீஸ் தலைநகர் ஏதென்சில் நடந்து வருகிறது. இதில் முக்கியநிகழ்வாக ஐ.ஓ.சி.யின் புதிய தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நடைபெறுகிறது. 12 ஆண்டுகள் தலைவராக இருந்த தாமஸ் பாச் பதவி விலகுவதையடுத்து சர்வதேச விளையாட்டு அமைப்பில் மிகவும் அதிகாரமிக்க அந்த அரியணையில் அமரப்போவது யார் என்ற கேள்வி எழுந்துள்ளது.

தலைவர் பதவிக்கு 7 பேர் போட்டியிடுகின்றனர். அவற்றில் முன்னாள் நீச்சல் வீராங்கனையும், ஜிம்பாப்வே விளையாட்டுத்துறை மந்திரியுமான கிறிஸ்டி கவன்ட்ரி, உலக தடகள சம்மேளன தலைவர் செபாஸ்டியன் கோ, ஐ.ஓ.சி. நிர்வாக குழுவின் துணைத்தலைவர் ஜூவான் ஆன்டோனியா சமராஞ்ச் (ஸ்பெயின்) ஆகியோரில் ஒருவர் வெற்றி பெற அதிக வாய்ப்புள்ளது.

மேலும் சர்வதேச சைக்கிளிங் சங்க தலைவர் டேவிட் லாப்பரடின்ட், ஜிம்னாஸ்டிக்ஸ் சங்க தலைவர் மோரினாரி வதானாப், சர்வதேச ஸ்கை மற்றும் ஸ்னோபோர்டு தலைவர் ஜோஹன் எலியாஸ், ஜோர்டான் நாட்டு இளவரசர் பைசல் பின் ஹூசைன் ஆகியோரும் போட்டியாளர்களாக உள்ளனர். ஐ.ஓ.சி.யின் 100க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் வாக்களித்து புதிய தலைவரை தேர்வு செய்ய உள்ளனர்.

# ஸ்வீட் ஹார்ட் படத்தின் 'ஒருத்தி' வீடியோ பாடல் வெளியானது




கடந்த 2019ல் வெளியான 'நெஞ்சமுண்டு நேர்மையுண்டு ஓடு ராஜா' படத்தில் ஹீரோவாக கதாநாயகனாக தமிழ் சினிமாவில் அறிமுகமானவர் ரியோ ராஜ். அதனை தொடர்ந்து 'பிளான் பண்ணி பண்ணனும், ஜோ' ஆகிய படங்களில் நடித்து மக்கள் மத்தியில் வரவேற்பை பெற்றார்.

இந்தநிலையில் இவரது நடிப்பில் கடந்த 14ந் தேதி 'ஸ்வீட் ஹார்ட்' படம் வெளியானது. இசையமைப்பாளர் யுவன் சங்கர் ராஜா தயாரித்துள்ள இப்படத்தில் கோபிகா ரமேஷ் கதாநாயகியாக நடித்துள்ளார். மேலும் அருணாசலேஸ்வரன், ரெஞ்சி பணிக்கர், துளசி, ரெடின் கிங்ஸ்லி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். அறிமுக இயக்குனர் ஸ்வினீத் எஸ் சுகுமார் இப்படத்தை எழுதி இயக்கியுள்ளார். திரையரங்கள் நல்ல வரவேற்பை பெற்று வரும் இப்படம் ரூ. 5 கோடிக்கும் அதிகமாக வசூல் செய்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் இப்படத்தில் இடம் பெற்றுள்ள 'ஒருத்தி' என்ற வீடியோ பாடல் வெளியாகி உள்ளது. இந்த பாடலை யுவன் சங்கர் ராஜா மற்றும் ஆதித்யா இணைந்து பாடியுள்ளனர். பாடல் வரிகளை விக்னேஷ் ராமகிருஷ்ணா எழுதியுள்ளார்.


# ஐ.பி.எல். 2025: போட்டிகள் நடைபெறும் அனைத்து மைதானங்களிலும் தொடக்க விழா

ஐ.பி.எல் தொடரின் 18வது சீசன் வருகிற 22ந் தேதியுடன் தொடங்குகிறது. இந்த சீசனில் மொத்தம் 10 அணிகள் விளையாடவுள்ளன. கிரிக்கெட் திருவிழாவுக்கு முன் பிரமாண்டமான தொடக்க விழா நடக்கவுள்ளது. இதில் பாலிவுட் நடிகர் நடிகைகள் எனப் பலர் கலந்து கொள்வார்கள். 17வது சீசனின் தொடக்க விழா பிரமாண்டமாக நடைபெற்றது, இதில் டைகர் ஷெராப், ஏ.ஆர்.ரஹ்மான் மற்றும் அக்ஷய் குமார் ஆகியோர் ஸ்டேடியத்தில் கலக்கினர்.

அந்த வகையில் இந்த சீசனில் பாலிவுட் பிரபலங்கள் கலக்க இருக்கின்றனர். நடிகை ஸ்ரத்தா கபூர், நடிகர் வருண் தவான், பாடகர் அரிஜித் சிங், திஷா பதானி மற்றும் ஸ்ரேயா கோஷல் ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்க உள்ளனர். மேலும் முன்னெப்போதும் இல்லாத வகையில் போட்டிகள் நடைபெறும் 13 இடங்களிலும் நிகழ்ச்சியை நடத்த பி.சி.சி.ஐ திட்டமிட்டுள்ளது.

அதன்படி, வருகிற 22ம் தேதி கொல்கத்தாவில் நடக்கும் தொடக்க விழா கொண்டாட்டத்தில் இந்தி நடிகை திஷா படானி மற்றும் பாடகி ஷ்ரேயா கோஷால் பங்கேற்க உள்ளனர். மற்ற இடங்களில் கலந்துகொள்ளும் பிரபலங்களின் தேர்வு நடைபெற்று வருவதாக தகவல் வெளியாகி உள்ளது.

# ரெட்ரோ படத்தின் 2வது பாடலின் அறிவிப்பு வெளியீடு




நடிகர் சூர்யாவின் 44வது படமான 'ரெட்ரோ' படத்தை இயக்குனர் கார்த்திக் சுப்பராஜ் இயக்கியுள்ளார். சூர்யாவின் 2டி மற்றும் கார்த்திக் சுப்பராஜின் ஸ்டோன் பென்ச் நிறுவனம் இணைந்து தயாரிக்கின்ற இப்படத்திற்கு இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணன் இசையமைத்திருக்கிறார்.

பூஜா ஹெக்டே கதாநாயகியாக நடித்திருக்கும் இப்படத்தில் ஜெயராம், கருணாகரன், ஜோஜு ஜார்ஜ், மற்றும் சுஜித் ஷங்கர் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இப்படம் வருகிற மே 1ந் தேதி தொழிலாளர் தினத்தில் வெளியாக உள்ளது. முன்னதாக டீசர், முதல் பாடல் வெளியாகி ரசிகர்களிடையே வரவேற்பைப் பெற்றது. அதனை தொடர்ந்து இப்படத்தின் படப்பிடிப்பு காட்சிகள் காமிக்ஸ் வடிவில் வெளியாகி வைரலாகி வருகின்றன.

சமீபத்தில் இப்படத்தின் முதல் பாடலான கண்ணாடி பூவே பாடல் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றது. அதனை தொடர்ந்து இப்படத்தின் இரண்டாவது பாடல் வெளியாக உள்ளது. இந்த பாடல் வருகிற 21ந் தேதி வெளியாக உள்ளது. இது குறித்த அறிவிப்பை இயக்குனர் கார்த்திக் சுப்பராஜ் வெளியிட்டுள்ளார்.

# ஐ.பி.எல். 2025: இந்த அணிதான் கோப்பையை வெல்லும் ஆஸி.முன்னாள் கேப்டன் கணிப்பு

18வது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி வருகிற 22ந் தேதி முதல் மே 25ந் தேதி வரை இந்தியாவின் பல்வேறு நகரங்களில் அரங்கேறுகிறது. கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெறும் தொடக்க ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் பெங்களூரு ராயல் சேலஞ்சர்ஸ் அணிகள் மோதுகின்றன. கிரிக்கெட் ரசிகர்களை மிகுந்த எதிர்பார்ப்புக்கு உள்ளாக்கி இருக்கும் இந்த தொடரில் வெற்றி பெறப்போகும் அணி குறித்து பல முன்னாள் வீரர்கள் தங்களது கணிப்பினை வெளியிட்டு வருகின்றனர். அந்த வரிசையில் ஆஸ்திரேலிய முன்னாள் கேப்டனான மைக்கேல் கிளார்க் இந்த தொடரில் கம்மின்ஸ் தலைமையிலான சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணி கோப்பையை வெல்லும் என்று கணித்துள்ளார். இது குறித்து பேசிய அவர் கூறுகையில், "நான் ஒரு தலைபட்சமாக இருப்பேன். நான் எனக்கு பிடித்த ஒரு வீரர் அடிப்படையில் தேர்வு செய்கிறேன். அந்த சூழலில் பேட் கம்மின்ஸ் தலையிலான சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணிதான் கோப்பையை வெல்லும் என்று நான் கருதுகிறேன். வரும் சீசனில் பந்துவீச்சு அவர்களுக்கு முக்கிய பங்கு வகிக்கும் என்று நினைக்கிறேன். அவர்களின் பேட்டிங் யூனிட் வலுவாக உள்ளது, ஒரு கேப்டனாக கம்மின்ஸ் கடந்த சீசனில் இருந்து நிறைய கற்றுக்கொண்டிருப்பார். டெத் பவுலிங் ஒரு முக்கிய அம்சமாக இருக்கும். கம்மின்ஸ் அதில் முக்கிய பங்காற்றுவார்" என்று கூறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.